1989 ஏப்ரல் 20]

திரு. செங்கை சிவம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அவ்வாறு தேங்கி நிற்காமல் இருப்பதற்கு, அரசினுடைய பரிசீலனையில் ஏதாவது செயற்குறிப்பு இருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதுபோன்ற குறிப்பிட்ட ஆலோசனையை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் எழுதிக் கொடுப்பார் என்று சொன்னால், அது துறைக்கு அனுப்பப்பட்டு உரிய நடவடிக்கை எடுக்கப்படும்.

திரு. எம். அப்துல் லத்தீப்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தப் பாதாளச் சாக்கடைத் திட்டம் முழுமையாக மறு பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டு இப்போது இருக்கிற இந்தப் பாதாளச் சாக்கடைகளையெல்லாம் சீர்படுத்துவதோடு புதிய திட்டத்தினை அடிப்படையாகக் கொண்டு ஒரு திட்டம் அமைக்கப்படுமா? அதே நேரத்திலே, 200 கோடி ரூபாய் இந்தத் திட்டத்திற்காக, 'எக்ஸ்பர்ட் கமிட்டி' ஒன்று ஆலோசனையாக வழங்கி இருக்கிறது என்று சொல்லியிருக்கிறார்கள். அது எப்போது நடைமுறைக்கு வரும் இப்போது சென்னை நகரத்திலே இருக்கின்ற பாதாளச் சாக்கடைகளெல்லாம் யானைப் பிடிக்கின்ற பள்ளங்களாக மாறி இருக்கின்றன. அதிலே இருக்கக் கூடிய அந்த இரும்பு மூடிகள் எல்லாம் பல இடங்களிலே திருட்டுப் போகின்றனவோ அல்லது எடுத்துச் சென்று விடுகிறார்களோ, தெரியவில்லை. ஒவ்வொரு தெருவிலும் இந்தப் பாதாளச் சாக்கடை இப்படி யானைப் பிடிக்கின்ற பள்ளங்களாக இருக்கின்றன. சிறு குழந்தைகள் அங்கே போனால் அதிலே விழுந்து விடுகிறார்கள். பல விபத்துக்கள் இதனால் ஏற்படுகின்றன. ஆகவே, இது குறித்து உடனடியாக ஆய்வு செய்து அப்பேற்பட்ட இடங்களிலே தடுப்பு நடவடிக்கைகளை ஏற்படுத்த அரசு முன்வருமா?

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் இதற்கான பதிலை முன்பே சொல்லியிருக்கிறேன். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கவனித்தாரா என்று எனக்குத் தெரியவில்லை. இது போன்ற சந்துகளில் மக்கள் இறங்கி சீர் செய்வதற்குப் பதிலாக இயந்திரங்களின் மூலமாக அவைகளைச் சீர் செய்வதற்குச் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன என்பதைச் சுட்டிக் காட்டி இருக்கிறேன்.

அவினாசி நகர மருத்துவமனையை விரிவுபடுத்துதல்:

87—(*வினா எண் 524) திரு. ஆர். அண்ணாநம்பி., மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

[1989 ஏப்ரல் 20

கோவை மாவட்டம், அவினாசி நகர மருத்துவமனையின் படுக்கை வசதியை விரிவுபடுத்த அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்சமயம் அது குறித்த நடவடிக்கை எதுவும் பரிசீலனையில் இல்லை.

திரு. ஆர். அண்ணாநம்பி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அவினாசி நகரம் என்பது ஒரு மிகப்பெரிய நகரமாகும். அதிலே மக்கள் தொகை அதிகமாக இருக்கிறது. அங்கே தற்போது 15 படுக்கை வசதி கொண்ட மருத்துவமனை தான் செயல்பட்டு வருகிறது. இதனால் மக்களுக்குப் போதுமான சிகிச்சை அளிக்க முடியவில்லை. பக்கத்திலே இருக்கிற, மிக குட்டி நகரங்களாக இருக்கிற சேவூர், தெக்கலூர் போன்றப் பகுதிகளிலேயிருந்தும் மக்கள் இங்குதான் சிகிச்சைக்கு வர வேண்டும். எனவே இந்த மருத்துவமனையை விரிவு படுத்துவதற்கான திட்டத்தை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இனி மேலாவது வகுப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசின் நிதி நிலையைக் கணக்கிலே கொண்டு இது போன்ற முயற்சிகள் மேற்கொள்ளப்படும்.

திரு. ஆர். அண்ணாநம்பி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுக்கப்படும் என்று சொன்னார்கள். நிச்சயமாக அந்தப் பகுதியில் மிக விரைந்து அந்த நடவடிக்கையை எடுக்கவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். இது அந்தப் பகுதி மக்களுடைய நீண்ட நாள் கோரிக்கையாகும். அந்த மருத்துவமனையை விரிவுபடுத்தவேண்டுமென்று நீண்ட நாட்களாக கேட்டுக்கொண்டு இருக்கிறார்கள். எனவே அவிநாசி நகரத்தில் இயங்கி வருகின்ற அந்த மருத்துவமனையிலுள்ள 15 படுக்கைகளை 30 படுக்கைகளாக மாற்றி அங்கே ஒரு அறுவை சிகிச்சைப் பகுதியையும் இணைத்து செயல்படுத்திக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நீண்ட நாட்களாகத் தேங்கிக் கிடக்கின்ற கோரிக்கைகளெல்லாம்.... (மணியடிக்கப் பெற்றது)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அவர் உங்களை விடை சொல்லச் சொல்லவில்லை; கேட்டுக்கொண்டார், அவ்வளவுதான்.

1989 ஏப்ரல் 20]

திரு. கே. ரமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அவிநாசி தாலுக்காவின் தலைமை மருத்துமனையாக அந்த அவிநாசி மருத்துவமனை உள்ளது. இதற்குத் தேவையான ஏற்பாடுகளும் படுக்கை வசதிகளும் இல்லையென்பதுபற்றித்தான் மாண்புமிகு உறுப்பினர் அண்ணாநம்பி அவர்கள் குறிப்பிட்டார்கள். அதற்கு மேல் இப்போது அங்கு புதிய மாற்றம் ஏற்பட்டிருக்கிறது என்பதையும் அமைச்சர் அவர்கள் கவனிப்பார்கள் என்று எதிர்பார்க்கிறேன். அவிநாசி தாலுக்கா ஒரு பிற்படுத்தப்பட்டப் பிரதேசம் என்று அரசால் 'டிக்ளேர்டு, பண்ணப்பட்டி அங்கே பல தொழிற்சாலைகள் உருவாகி இருக்கின்றன. ஆகவே, இந்தச் சூழ்நிலையில் அமைச்சர் அவர்கள் விசேஷக் கவனம் செலுத்தி இதுவரைக்கும் போதிய கவனம் செலுத்தாவிட்டாலும் இப்போதாவது வீசேஷக் கவனம் செலுத்தி தாலுக்கா மருத்துவமனையை தலைமை மருத்துவமனையாக ஆக்கி, ஜெனரேட்டர், அறுவை சிகிச்சைக்கூடங்களிலிருந்து, அதிகப்படியான படுக்கை வசதியிலிருந்து, டாக்டர்கள் மற்றும் சகல வசதிகளையும் செய்து கொடுக்க அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா அதற்கான ஆலோசனைகளை உடனே துவக்குவார்களா என்று நான் கேட்க விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதற்கானக் செயற்குறிப்புகளைக் குறித்து, கோயம்புத்தூர் மாவட்ட சுகாதார அலுவலரை அரசு கேட்டிருக்கிறது. அதுகுறித்து அவரிடமிருந்து அறிக்கைகள் வரப்பெற்றவுடன் இதுகுறித்து நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

திரு. சி. கோவிந்தசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அவிநாசி பகுதியில் ஏற்படுகின்ற கடுமையான விபத்துகளினால் பாதிக்கப்படக் கூடியவர்களை அருகிலே இருக்கக்கூடிய திருப்பூரிலே உள்ள மாவட்ட அரசு மருத்துவமனைக்குத்தான் கொண்டு வருகிறார்கள். குறிப்பாக, பொங்கலூர், பல்லடம், திருப்பூர் இதுபோன்ற பகுதிகளிலே ஏற்படுகின்ற விபத்துக்களில் பாதிக்கப்படக்கூடியவர்களை மாவட்ட மருத்துவமனை இருக்கிற திருப்பூருக்கு எடுத்து வந்தால் அங்கே கவனிப்பதற்காகப் போதுமான கருவிகளும் வேண்டிய வசதிகளும் இல்லாத காரணத்தினாலே அவர்களை மீண்டும் அங்கேயிருந்து கோவைக்கு எடுத்துச் செல்கின்ற நிலைமை இருக்கிறது. இதனால் பல உயிர்கள் வழியிலேயே போகிற நிலைமை இருக்கிற காரணத்தினாலே அந்த மாவட்ட மருத்துவமனையில் முறையானக் கருவிகளைக் கொண்டு, முறையான வைத்தியத்தைச் செய்வதற்கு அரசு ஏற்பாடு செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே' கேள்வி அவிநாசியைப் பற்றியது. திருப்பூருக்கு இப்போது தாவ வேண்டாம் என்று கேட்டுக் கொள்கிறேன்.